## பட்ஜெட்டில் ஒரே ஒரு ‘ரூ’ போட்டு மற்றவர்களை அலறச் செய்த முதலமைச்சர் இருக்கின்ற வரை

# இந்தித் திணிப்பை மட்டுமல்ல; எந்தத் திணிப்பையும் யாரும் கொண்டு வந்துவிட முடியாது!

## சட்டப்பேரவையில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிலுரை!

**சென்னை, மார்ச் 30 -**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிலுரையாற்றுகையில், பட்ஜெட்டில் ஒரே ஒரு ‘ரூ’ போட்டு மற்றவர்களை அலறச் செய்த முதலமைச்சர் இருக்கின்ற வரை இந்தித் திணிப்பை மட்டுமல்ல; எந்தத் திணிப்பையும் யாராலும் கொண்டு வந்துவிட முடியாது” என குறிப்பிட்டார்.**

பேரவையில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, அரண்மனையிலிருந்த அரசியலை திராவிட இயக்கமாக்கி, ஆலமரத்திற்கு எடுத்து வந்தவர் தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த திராவிட இயக்கத்தை வெட்டவெளிக்கு எடுத்துச்சென்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டவெளியில் இருந்த திராவிட இயக்கத்தை ஊர்தோறும், கிராமந்தோறும் கொண்டு சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊர்தோறும் இருந்த திராவிட இயக்கத்தை, தன்னுடைய திட்டங்கள்மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சேர்க்கின்றவர் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பாரம்பரியமும் பெருமையும் மிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நம் துறைகள் சார்ந்து, துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, முதன்முறையாக மானியக்கோரிக்கை விவாதத்தின்மீது பதிலுரை வழங்குகின்ற வாய்ப்பை வழங்கிய, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய ஜனநாயகத்தின் போர்க்குரல் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூறாண்டுகள் வரலாறுகொண்ட இந்த சட்டமன்றப் பேரவையில், சுமார் 50 ஆண்டுகள் வரலாறையும், அனுபவத்தையும் கொண்டு, எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், ஏனைய அமைச்சர்கள் அனைவருக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தோழமை இயக்கங்களின் தலைவர்கள் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**டெல்லியில் 3 கார்களில் மாறிச் சென்றுள்ளார்!**

அவசரப் பணியாக டெல்லி சென்று திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருக்கும் வணக்கம். நான் பதிலுரையாற்றும் சமயங்களில் ஒருமுறைகூட அவர்கள் அவையில் இருப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நானும் தொடர்ந்து பார்த்துக்கொண்டேதான் இருக்கிறேன். ஏற்கெனவே இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னுடைய காரில் ஏறி, அவர் செல்ல முயன்றபோது, தயவுசெய்து எனது காரை எடுத்துச் செல்லுங்கள்; எனக்கொன்றும் பிரச்சினையில்லை என்று நான் சொன்னேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது உறுப்பினர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்கள் எழுந்து நின்று, எங்கள் கார் தவறாக எங்கும் சென்றுவிடாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு டெல்லியில் route மாறி, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 3 கார்கள் மாறிச் சென்றிருக்கிறார்கள். அவர்களது கட்சி அலுவலகத்திற்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு வாழ்த்துகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**‘ரூ’ போட்டு ஆரம்பித்த பட்ஜெட்!**

பொதுவாக ஒரு பேப்பரில் எழுத ஆரம்பிக்கும்போது, சிலர் ‘உ’ போட்டு, அதற்குக் கீழே இரண்டு கோடுகள் போட்டு எழுதத் தொடங்குவார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ‘ரூ’ போட்டு பட்ஜெட்டை ஆரம்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாசிஸ்ட்டுகள், எத்தனை ரூல்ஸ் போட்டு தமிழ்நாட்டை அடக்க நினைத்தாலும், பட்ஜெட்டில் ஒரே ஒரு ‘ரூ’ போட்டு, அவர்களை அலறச் செய்தவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட நம்முடைய தலைவர் அவர்கள் இருக்கின்றவரை, தமிழ்நாட்டுக்குள் இந்தித் திணிப்பு மட்டுமல்ல; எந்தத் திணிப்பையும் யாராலும் கொண்டு வந்துவிட முடியாது என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துரைத்து என் பதிலுரையை தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.3.2025) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களின் போது பதிலளித்து உரையாற்றினார்.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள் துறை. 1989 ஆம் ஆண்டு, மகளிரின் பொருளாதார சுதந்திரத்துக்காக தருமபுரி மண்ணிலிருந்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்ற விதையைத் தூவியவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விதை இன்றைக்கு தமிழ்நாடெங்கும் பரவி மிகப்பெரிய ஆலமரமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்திய ஒன்றியமே நம்முடைய சுய உதவிக் குழுக்களைப் பார்த்து அவர்களுடைய திட்டங்களை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், அங்குள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை நேரடியாக ஒவ்வொரு குழுவாக முடிந்தவரை சந்திக்க வேண்டும், அவர்களோடு உரையாட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிரு ந்தார்கள்.

அதன்படி, சமீபத்தில், திருவாரூர் மாவட்டம் சென்றபோது, பழவனக்குடி ஊராட்சியைச் சேர்ந்த குழுக்களின் சகோதரிகளை சந்தித்து கலந்துரையாடினோம். அப்போது, குழு சகோதரிகள் சில கோரிக்கைகளை முன் வைத்தார்கள். அதனை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், உடனடியாக அதைத் தீர்க்க வேண்டு மென்று உத்தரவிட்டவுடன் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு 5 மணி நேரத்திற்குள் அவர்கள் கேட்ட கலைஞர் கனவு இல்லம் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டா உட்பட ஏராளமான மனுக்களுக்கு தீர்வுகளை உடனுக்குடன் வழங்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரண்மனையிலிருந்த அரசியலை திராவிட இயக்கமாக்கி, ஆலமரத்திற்கு எடுத்து வந்தவர் தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த திராவிட இயக்கத்தை வெட்டவெளிக்கு எடுத்துச் சென்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டவெளியில் இருந்த திராவிட இயக்கத்தை ஊர்தோறும், கிராமந்தோறும் கொண்டு சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊர்தோறும் இருந்த திராவிட இயக்கத்தை, தன்னுடைய திட்டங்கள்மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சேர்க்கின்றவர் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள்.**

**4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 1.35லட்சம் புதிய குழுக்கள்!**

திராவிட மாடல் அரசு அமைந்தது முதல், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சத்து 35 ஆயிரம் புதிய குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

**குழுக்களுக்கு வங்கிக் கடன்:** சென்ற ஆண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குக் target கொடுத்தார். அந்த target-ஐ achieve செய்துவிட்டோம். இந்தாண்டு 37 ஆயிரம் கோடி ரூபாயை வங்கிக் கடன் இணைப்புகளாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குக் இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 4 ஆண்டுகளில், இப்படியாக மொத்தம் 1 இலட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு, வங்கிக் கடன் இணைப்புகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனை முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வெறும் கடன் தொகையாக மட்டும் பார்க்கவில்லை; அவர்களுடைய உழைப்பின்மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைத் தொகையாகத்தான் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள், கடந்த 5 ஆண்டுகளில், சராசரியாக ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகின. ஆனால், சென்ற ஆண்டு நம்முடைய துறையினுடைய கூடுதல் முயற்சியால் சென்ற ஆண்டு மட்டும் 300 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தாண்டு இத்துறைக்கு 350 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்ய வேண்டு மென்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு target கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மகளிர் குழுக்களுக்கு அடையாள அட்டை!**

குழுக்களுக்கு ஐ.டி. கார்டு கொடுக்க வேண்டுமென்று குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தனர். கடந்த மார்ச் 8 ஆம் தேதி, உலக மகளிர் தினத்தன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ID Card இன்மூலம், குழுவினர் தயாரிக்கும் பொருட்களை 25 கிலோ வரை 100 கி.மீ. தூரம் வரை அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, இன்னும் ஏராளமான பலன்களை இந்த அடையாள அட்டைகள்மூலம் குழுக்களைச் சார்ந்த சகோதரிகள் பயன்பெறலாம். விரைவில் அந்த ID Card அனைத்து குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, 65 குழுக்களின் சகோதரிகள், சமைத்து விற்பனை செய்யும் விதமாக, சென்னை மெரினாவில் முதன்முதலாக உணவுத் திருவிழாவை கடந்த ஆண்டு நடத்திக் காட்டினோம். (மேசையைத் தட்டும் ஒலி) 5 நாட்கள் நடந்த இந்தத் திருவிழாவுக்கு சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் வருகை தந்து ஆதரவு கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உணவுத் திருவிழா வின்மூலம், கிட்டத்தட்ட 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உணவுப் பொருட்கள் விற்பனை ஆகியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## வீட்டு மனைப் பட்டா - ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டம்; மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு!

## 18 லட்சம் மாணவர்களின் காலை உணவுத் திட்டத்தில் 51 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுவினரின் பங்கும் உள்ளது!

**நம்முடைய திட்டங்களில் மகளிர் குழுக்களின் பங்களிப்புகள்:** காலை உணவுத் திட்டத்தின் வெற்றிக்குப் பின்னால், குழுக்களின் சகோதரிகள் மிக மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கின்ற 18 இலட்சம் மாணவர்கள், பயன்பெறும் வகையில், 51 ஆயிரம் குழு சகோதரிகள், காலை உணவுத் திட்டத்தில் அவர்களுடைய பங்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் கிட்டத்தட்ட 2 கோடி பயனாளிகளை சென்றடைந்திருக்கிறோம். இந்தத் திட்டத்திலும், சுமார் 11 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த சகோதரிகளின் பங்களிப்பு இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள், நேற்று பேசும்போது, நகர்ப்புறங்களில், மகளிர் குழுக்களுக்கு கூட்ட அரங்கு அமைக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறீர்கள். ஏற்கெனவே, 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் இந்தத் திட்டம் இருக்கின்றது. அவர்கள் கூட்டம் நடத்து வதற்கு hall வசதி ஏற்கெனவே இருக்கின்றது. இப்போது நகரப்புறங்களிலும் அந்த வசதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நான் மாவட்டங்களுக்கு ஆய்வுக்கு செல்லும்போது, தொடர்ந்து குழு சகோதரிகள், ஏற்கனவே, இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்கள். அதனை முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்றோம். அதன்படி, நகர்ப்புறங்களில் குழுவுக்கான கூட்ட அரங்கங்கள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டம்!**

உறுப்பினர் அண்ணன் வெங்கடேஸ்வரன் அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பயன்கள், தருமபுரி மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களுக்கும் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார்கள். 2006-2011, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தருமபுரி மாவட்டத்தின் 6 ஒன்றியங்களில் “வாழ்ந்து காட்டுவோம் திட்டம்” 1.O செயல்படுத்தப்பட்டது.

விரைவில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3 - VKP 3.O, செயல்படுத்தப்படும்போது,

உங்கள் மாவட்டத்தில் விடுபட்டுள்ள அனைத்து ஒன்றியங்களும் நிச்சயம் சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருவதால், கடந்த சுதந்திர தின விழாவின் போது, ‘முதலமைச்சரின் நல் ஆளுமை விருதை’, நம்முடைய துறை பெற்றது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை!**

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மூலம், அரசுத் திட்டங்களை ஆய்வு செய்து, அவை சரியான திசையில் செல்வதை தொடர்ந்து ஆய்வு செய்கிறோம்.

**அறிவிப்புகளின் நிலை:** நம்முடைய அரசின் மூலம் இதுவரை வெளியிடப்பட்டுள்ள 6,812 அறிவிப்புகளின் செயலாக்கத்தினை நம்முடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மூலம் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். அறிவிக்கப்பட்டுள்ள 6,812 அறிவிப்புகளில், 96 சதவிகித அறிவிப்புகளுக்கு, அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 3,838 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள அறிவிப்புகளை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டம்!**

‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின்கீழ், கடந்த 2 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை அளித்துள்ளார்கள். அவற்றை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு ஆய்வு செய்தது. அதன் மூலம், 2,437 கோரிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளில், 513 பணிகளை மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிய வந்தது. எனவே, அவற்றிற்கு மாற்றாக, வேறு கோரிக்கைகளை அளிக்குமாறு மாவட்ட ஆட்சியர் மூலமாக, ஓராண்டுக்கு முன்பே சம்பந்தப்பட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தப்பட்டது.

அதன்படி 91 தொகுதிகளில் இருந்து மாற்றுக் கோரிக்கைகள் வந்துள்ளன. அதில், 216 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்:** இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கும் வகையில் அமைந்துள்ள, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, ஒருங்கிணைக்கும் வாய்ப்பு, நம்முடைய சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில், இன்றைக்கு ஒவ்வொரு மாதமும், சுமார் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் ஒவ்வொருவரும் மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகை பெற்று, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்மூலம், கடந்த 19 மாதங்களில் மட்டும், 21,657 கோடி ரூபாய் உரிமைத் தொகையாக மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

“இதுவரை உரிமைத்தொகை பெற்றிடாத தகுதி வாய்ந்த மகளிர், புதிதாக விண்ணப்பிக்க விரைவில் வாய்ப்பு வழங்கப்படும்” என்ற மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு இந்த நேரத்தில் நான் என்னுடைய நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அடுத்து, வட சென்னை வளர்ச்சித் திட்டம்:** வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6,858 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 235 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 95 சதவிகித பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதேபோல, பட்டா வழங்குதல். சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ், சென்னை மற்றும் புறநகரில், கடந்த 8 மாதங்களில் மட்டும், 1,36,149 பட்டாக்களை வழங்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, தொடர்ந்து பட்டாக்களை வழங்குவோம் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம். ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ், கடந்த 3 ஆண்டுகளில், நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம், 2,65,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட 2,65,000 நபர்களில், 1,34,000 பேர் மகளிர் என்பதில் எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை!**

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை - மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகியவை, நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும், கலைஞர் மகளிர்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சி புதிய உயரங்களைத் தொட்டுள்ளது!